சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ம் நாள் வியாழன் கிழமை

**I.A.No.7/2024 in IA.3/2023 in IA.1/2023 in OS.No.127/2022**

(CNR.No.TNTP180004842022)

ராணி ......மனுதாரர்/3 ம் தரப்பினர்

//எதிர்//

1. V. துரை (இறப்பு)
2. V. வேணுகோபால் (இறப்பு)
3. V. கணேசன்
4. பழனியம்மாள்
5. கர்ணன்
6. சத்யா
7. பானுமதி
8. ராஜ்குமார்
9. சரவணகுமார்
10. சுந்தரி
11. ஈஸ்வரி
12. கலா
13. சுதா ....எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 17.09.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:07 +0530

இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராமமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.N.மலையமான் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 6, 10, 12 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராகிவிட்ட நிலையிலும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.R.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் கண்ட காரணங்களுக்காக, இறந்துபோன 2 ஆம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 884 நாட்கள் கால தாமதத்தினை மன்னித்து உத்தரவிடக்கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5 ன் கீழ் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் தமிழாக்க சுருக்கம் –

இம்மனுவின் மனுதாரர், அசல் மனுவின் மனுதாரர். மனுதாரரை அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்ககோரி அசல் மனு இம எண் 3/2023 என்ற எண்ணில் மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு நிலுவையில் இருக்கும்போது 2 ஆம் எதிர்மனுதாரர் 21.01.2022 ஆம் தேதி அவரது வாரிசுகளாக 4 முதல் 6 உத்தேச தரப்பினர்களை விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி அசல் மனு நிலுவையில் இருக்கும்போது 1 ஆம்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:13 +0530

எதிர்மனுதாரர் அவரது வாரிசுகளாக 7 முதல் 13 உத்தேச தரப்பினர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அசல் வழக்கு பாக பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கின் வாதி பிரதிவாதிகள் வஞ்சக கூட்டு சேர்ந்து இந்த மனுதாரரை தரப்பினராக சேர்க்காமல் முதல் நிலை தீர்ப்பாணை பெற்று அதனை தொடர்ந்து இறுதி நிலை தீர்ப்பாணை மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் அசல் வழக்கில் பிறப்பித்த முதல்நிலை தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் கோரி இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.86/2015 என்ற எண்ணில் இம் மனுவின் மனுதாரர் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு இறுதிநிலைக்கு வந்துவிட்டது. இறந்துபோன 2ஆம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதற்காக மனு தாக்கல் செய்வதில் 884 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இறந்துபோன 1ஆம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதில் 53 நாட்கள் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால் மனுவில் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள காரணங்களை ஏற்றுகொண்டு மனுவினை அனுமதிக்கவில்லை என்றால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். அதனால் மனுவினை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல்.

3. <u>எதிர் மனுவுரை ஆட்சேபணையின் சுருக்கம்</u> –

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவுடன் கூடிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் ஏறத்தாழ 2 வருடங்கள் கழித்து ஏறத்தாழ 884 நாட்கள் கழித்து இந்த மனுவை முன்னெடுத்துள்ளார். மேலும் இந்த மனுவுடன் கூடிய பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் பிரதிவாதிக்கு



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:19 +0530

உடல்நிலை சரியில்லை என கூறப்பட்டுள்ள நிலையில், உடல் நல சிகிச்சை எந்த மருத்துவமனையில் எடுக்கப்பட்டது என்றும் அதில் சிகிச்சைக்கான எந்த ஆதாரமும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை. இதற்கு ஆதாரமாக எந்த ஒரு பரிசோதனை அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வாறாக பிரதிவாதிக்கு சிகிச்சையானது எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரைக்கும் எடுக்கப்பட்டது என்பதற்கும் எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த மனு தாக்கல் செய்வதற்கு சட்டப்படி ஒவ்வொரு நாளும் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களை தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த மனுதாரர் அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் அல்லது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட காரணம் எதுவும் தெளிவாக கூறப்படவில்லை. மனுதாரர் வழக்கை முடிவு பெறாமல் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவிற்கு சரியான முகாந்திரம் எதுவும் கிடையாது. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல்.

4. தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை – மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா ?

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் எதுவும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், அசல் வழக்கானது


R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:25 +0530

பாகப்பிரிவினை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்குள் வஞ்சககூட்டு சேர்ந்து தாக்கல் செய்து இந்த மனுதாரரை தரப்பினராக சேர்க்காமல் முதல்நிலை தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளதாகவும் அதனை தொடர்ந்து தாக்கல் செய்துள்ள இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் மனுதாரரை தரப்பினராக சேர்க்க அனுமதிகோரி அசல் மனு இம எண் 3/23 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் அவர்களது வாரிசுகளான உத்தேச தரப்பினர்களை விட்டுவிட்டு இறந்துவிட்டதால் மேற்படி உத்தேச தரப்பினர்களை அசல் மனுவில் அவசிய தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிடக்கோரி தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவினை அனுமதித்து அதற்கான காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

7. 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், அசல் வழக்கு பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பாக பிரிவினைக்கான இறுதி நிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து அதில் சமரச தீர்வு ஏற்பட்டு சமரச மனுவினை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் இந்த மனுவின் மனுதாரருக்கு எவ்வித அடிப்படை தகுதியும் இல்லாமல் அவரை தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு எவ்வித உரிமையும் தகுதியும் இல்லை என்றும் அதனால் மேற்படி மனுவில் இறந்துபோன நபர்களின் வாரிசுதாரர்களை சேர்ப்பதற்காக தாக்கல் செய்துள்ள தற்போதைய மனுவில் மனுதாரருக்கு எவ்வித நல்ல வாதமும் மனுதாரருக்கு இல்லை என்றும் இறந்துபோன 1, 2 எதிர்மனுதாரர்களின் வாரிசுதாரர்களை



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:36 +0530

சேர்ப்பதற்காக ஏற்பட்ட காலதாமத்திற்கு ஒவ்வொரு தினங்களுக்கான கால தாமத்தை குறிப்பிட்டு காரணத்தை தெரிவிக்கவிக்காத நிலையில் மனு சங்கதிகளை மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்கு எவ்வித தகுந்த சான்றாவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் அதனுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பார்வையிடப்பட்டன. வழக்கு பாகபிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதனை தொடர்ந்து இறுதிநிலை தீர்ப்பாணை மனு இ.ம.எண்.1/23 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வரும்போது தரப்பினர்களுக்கு இடையே சமரசம் ஏற்பட்டதாக கூறி சமரச மனு இ.ம.எண்.2/2023 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது.

9. மேற்படி மனுக்கள் நிலுவையில் இருக்கும்போது தற்போதைய மனுவின் மனுதாரர்/ உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி இ.ம.எண்.3/2023 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவும் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி இ.ம.எண்.3/2023 மனு நிலுவையில் இருக்கும்போது 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டதால் அவர்களது வாரிசுகளை அசல் மனுவில் தரப்பினர்களாக சேர்ப்பதற்காக ஏற்பட்ட கால தாமதத்தை மன்னிக்க கோரி தற்போதைய மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:43 +0530

**10**. மனுதாரருக்கு இ.ம.எண்.3/2023 ல் எவ்வித நல்ல வாதமும் தகுதியும் இல்லை என்பதால் தற்போதைய மனுவினை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு எந்த தகுதியும் இல்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இ.ம.எண்.3/2023 மனுவில் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள வாதத்தினை பொறுத்து இருதரப்பு விசாரணைக்கு பின்பு மட்டுமே தீர்வு காண முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி மனு நிலுவையில் இருக்கும்போது மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட காரணத்தினாலும் அவர்களது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்ப்பதற்காக தற்போதைய மனுவுடன் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும் அந்த மனுக்களில் எவ்வித ஆட்சேபணைகளும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்பதை கவனத்தில் கொண்டும் மேற்படி இறந்துபோன 1, 2 எதிர்மனுதாரர்களின் வாரிசுகளை தவிர அவர்களுக்கு வேறு வாரிசுகள் இருப்பதாக எவ்வித மறுப்பு வாதமும் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கவில்லை என்பதாலும் அசல் மனுவினை மேற்கொண்டு நடத்தும் பட்சத்தில் மட்டுமே அசல் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள இறுதி நிலை தீர்ப்பாணை மனுவிலும் இருதரப்பினர்களுக்கிடையே உள்ள நிரந்தர தகராறுகளுக்கான இறுதி தீர்வினை பெற முடியும் என்ற காரணத்தினாலும் மனுவினை அனுமதிப்பதுதான் நீதி சார்ந்த செயல் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இந்த மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக**, மனு அனுமதிக்கப்படுகிறது. இறந்துபோன 2ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதற்கான மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:49 +0530

காலதாமதத்தினை மன்னித்து மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 08 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:38:54 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

**சான்றாவணங்களின் பட்டியல்**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு

சாட்சி மற்றும் சான்றாவணம் – இல்லை.

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.10.24 17:39:04 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

Subordinate Court Lalgudi
**I.A.No.7/2024 in IA.3/2023 in IA.1/2023 in OS.No.127/2022**
Draft / Fair Order
**Date – 23.10.2025**